6. கவன ஈர்ப்பு.

(1) கன்னியாகுமரி மாவட்ட ஆலய ஊழியர்கள் நாகர் கோவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்னால் செய்ய இருக்கும் சத்தியாகிரகம் குறித்து.

திரு. ஆ. நல்லசிவம் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—

''கன்னியாகுமரி மாவட்ட ஆலய ஊழியர்கள் தங்களுடைய வேலைப் பாதுகாப்பு மற்றும் சம்பள உயர்வு ஆகிய காரணங்களுக்காக கடந்த 3 மாத காலமாகப் போராடி, நாகர்கோவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்னால் சத்தியாகிரகம் செய்ய இருப்பதாக அறிவித்திருப்பதால், அப்பகுதி மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து,''

* மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான விவரமான அறிக்கை @ ஒன்று அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து வேறு ஏதாவது குறிப்புகள் தேவையானால், இப்போது கேட்டால் தெரிவிக்கின்றேன்.

திரு. ஆ. நல்லசிவம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை இப்போது தான் இங்கே வைக்கப் பட்டிருக்கிறது, அதைப் படித்துப் பார்க்கவே நேரமில்லை, அதைப் படித்து விட்டிருந்தால் கேட்கலாம். இதுவரையில் படிக்கவே முடியவில்லை. கேள்வி எப்படி அதில் கேட்பது ? வேறு அது சம்பந்தமாகக் கேட்கலாமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வேறு ஏதாவது கேட்பதாக இருந்தாலும் கேட்கலாம். கேளுங்கள்.

திரு. ஆ. நல்லசிவம் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற ஆலயங்களிலே எல்லாம் சுமார் ஆயிரம் கன்டின்ஜெண்ட் ஊழியர்கள் ரூ. 35 லிருந்து ரூ. 80 வரை சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். கேரள மாநிலத்திலே உள்ள ஆலயங்களில் உள்ள ஊழியர்கள் கிட்டத்தட்ட ரூ. 200 முதல் ரூ. 350 வரை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அளவுக்குக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ரூ. 80 வரையில் சம்பளம் கொடுப்பதாகச் சொன்னார்கள். இப்போது ரூ. 115 வரையில் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. இப்படி சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகின்றபோதே, கிட்டத்

@ 500—502 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சடிக்கப் பட்டுள்ளது.

தட்ட 9,36,056 ரூபாய் செலவாகிறது. அவர்கள் விரும்புகின்றபடி நாம் கொடுக்க வேண்டுமானால், மீண்டும் சுமார் 7 லட்சம் ரூபாய்க்கு மேல் தேவைப்படும். இந்த ஆலயங்களின் ஆண்டு வருமானம் சராசரி ரூ. 25 லட்சம். இதிலே $65\frac{1}{4}$ சதவிகிதம் சம்பளம் கொடுப்பதற்காகச் செலவிடப்படுகிறது. தற்போதுள்ள இந்தச் சூழ்நிலையில், தமிழகத்திலுள்ள அறநிலையத் துறையின் பொருளாதார நிலையில், இந்தப் பிரச்சினையை உடனடியாகக் கவனிக்க முடியாது. ஆனால் இந்த விஷயம் அரசினுடைய கவனத்திலே தீவிரமாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவிலே இதில் மாற்று வழி கண்டுபிடிக்க முயலும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கொடுத்த கோரிக்கைகளில் 3வது, 4வது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவம் : ஆலய ஊழியர்களை அறநிலையத்துறை ஊழியர்களாக, அரசு கடைநிலை ஊழியர்களாகக் கருதவேண்டும் என்று கேட்கப்பட்டது. அதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 30 வருடங்களாக எந்தவிதமான அதிகமான தொகையும் தரவில்லை. திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருக்கும்போது, கிடைத்தது போல்தான் இருக்கிறது. கடந்த 30 ஆண்டுக்காலமாக எந்தவிதமான உயர்வும் கிடைக்கவில்லை. அந்தத் தொழிலிலேயே இருந்து கொண்டிருப்பதால்' அவர்களால் வேறு தொழிலையே ஈடுபட்டு செய்ய முடியாது. அந்தத் தொழிலையே நம்பிக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் எப்படிச் சாப்பிடுவார்கள்? ரூ. 25 லட்சம் வருமானம் வருகிறது. நடமாடும் தெய்வங்களாக இருக்கின்ற அவர்களுக்கு மேலும் உயர்த்திக் கொடுக்காவிட்டால், என்ன பிரயோசனம் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ரூ. 7 லட்சம் செலவாகும் என்று எண்ணாமல். அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் கூட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 3-40)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, 30 வருடங்களாக உயர்த்தவே இல்லையென்று சொன்னார்கள். கடந்த 1-7-1977 முதல் நபர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்போது 1-7-1978 முதல் சில பிரிவினருக்கு 5 ரூபாயும், சில பிரிவினருக்குப் பத்து ரூபாயும் உயர்த்தி அளிக்கப்பட்டிருக்கிறது. அடுத்து, இன்னும் 7 லட்சத்தைக் கொடுத்து, அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கலாமே என்று உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அந்த ஊழியர்களோடு மாத்திரம் அது நிற்கவில்லை. அதுமாதிரி 60,000 ஊழியர்கள் கோவில்களுக்குள்ளே இருக்கிறார்கள். அது மிகப் பெரிய பிரச்சினை.

ஆலயங்களுக்கு பாக்கித் தொகை 18 கோடி ரூபாய் அளவிற்கு மக்களிடமிருந்து வர வேண்டியிருக்கிறது. ஆகவே இவைகளையும் கணக்கில் எடுத்து, சில 100 அல்லது 1000 தொழிலாளர்களுக்காக வாதிடும்போது' இப்படித் தர வேண்டியவர்களிடமிருந்து அவைகள் வருவதற்கும் வழி வகையை இந்த மன்றத்தின் மூலமாகக் கண்டுபிடித்துச் சொன்னால், இரண்டையும் சமன்படுத்தி, தமிழகத்தில் நல்ல நிலைமைகளை ஏற்படுத்த உதவியாக இருக்கும்.

(திரு. ஆ. நல்லசிவம் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் பேரில் 2 வினாக்களுக்கு மேலே அனுமதிக்க முடியாது. தயவு செய்து உட்காருங்கள்.

(2) திருச்சி மாவட்டம் கரூரை அடுத்த வெங்கமேட்டில் 11-8-1978 அன்று பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடம் இடிந்து விழுந்து மாணவிகள் இறந்ததும் காயமடைந்ததும் குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

'' திருச்சி மாவட்டம் கரூரை அடுத்த வெங்கமேட்டில் 11-8-78 அன்று பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடம் இடிந்து விழுந்து மூன்று மாணவிகள் இறந்ததும், 29 பேர் காயமடைந்ததும் குறித்து ''

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு தலைவரவர்களே, இது பற்றிய அறிக்கை (a) கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் படித்தார்கள், அதை நான் கவனித்துக் கொண்டிருந்தேன், அதைப்பற்றி ஏதாவது விளக்கங்கள் கேட்கவேண்டுமென்றால் கேட்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இரண்டு வினாக்களுக்கு அதிகமாகாமல் கேட்க வேண்டும். ஒன்றிலேயே முடித்துக்கொண்டால் நேரம் மிச்சமாகும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, நான் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையை இப்போதுதான் பார்த்தேன். இருந்தாலும் படித்ததாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இடையிலே அவர் அப்படிச் சொல்லக் கூடுமென்பதால் முன்கூட்டியே ஒட்ட

(a) 502-504 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.